DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.3/2018**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமு | Caste: | |
| Father's/Husband Name: | சின்னகண்ணு | Calling: | கூலி வேலை |
| Village: | செங்கல் நீரோடை | Religion: | |
| Taluk: | கீழக்கரை | Age: | 70 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 10.11.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை தாலுகா, காஞ்சிரங்குடிக்கு அருகில் உள்ள செங்கல் நீரோடையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். நான் தற்போது கீழக்கரையை சேர்ந்த மூர்டிராவல்ஸ்க்கு சொந்தமான தோட்டத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2017ம் வருடமும் இதே தோட்டத்தில்தான் வேலை பார்த்து வந்தேன். வழக்கில் இறந்துபோன பாண்டி மற்றும் புகார்தாரர் சித்ராவை தெரியும். அவர்கள் இருவரும் நான் வேலை செய்த தோட்டத்தில் தங்கி தோட்டவேலை பார்த்து வந்தார்கள். மைதீன் மகன் சேக் முகம்மது என்பவரை தெரியும். அவர் எங்கள் முதலாளியின் கார் டிரைவர். கடந்த சுமார் 2017ம் ஆண்டு இரவு சுமார் 11.30 மணியளவில் நான் தோட்டத்தில் தங்கி இருந்தேன். அப்போது சித்ராவும், பாண்டியும் தங்கியிருந்த குடிசை பக்கமிருந்து சத்தம் கேட்டது. அப்போது நானும், சேக் முகம்மதுவும் சென்று

பார்த்தோம். சேக் முகம்மது தற்போது உயிரோடு இல்லை. சேக் முகம்மது இறந்து சுமார் 3, 4 மாதங்கள் ஆகிறது. அந்த இரண்டு நபர்களில் ஒருவர் சித்ராவின் கணவர். அவர் பெயர் தெரியவில்லை. மற்றொருவர் சித்ரா கணவரின் நண்பர். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அந்த இருவரையும் நாங்கள் சத்தம்போட்டு அனுப்பிவைத்தோம். நான் சித்ராவிடம் இந்த நேரத்தில் வந்து உங்களிடம் சண்டை போடுகிறார்களே யார் இவர்கள் என்று கேட்டேன். அதற்கு சித்ரா ஒரு நபர் தன்னை ஏற்கனவே திருமணம் செய்த கணவர் என்று கூறினார். உடனே நான் எனது முதலாளிக்கு தகவல் தெரிவித்து இறந்த பாண்டி இன்னொருவரின் மனைவியை அழைத்து வந்து நம் தோட்டத்தில் வேலை செய்து வருகிறான், அதனால் இவர்களை இங்கு வைத்திருக்க கூடாது என்று சொன்னேன். முதலாளியும் இருவரையும் வேலையை விட்டு தோட்டத்தில் உள்ள காலிசெய்து போகும்படி சொல்லிவிட்டார். அவர்களும் சென்றுவிட்டார்கள். பின்பு 20 நாட்கள் கழித்து போலிசார் என்னை அழைத்ததின்பேரில் கீழக்கரை காவல் நிலையத்திற்கு சென்றேன். என்னுடன் சேக் முகம்மதுவையும் வரச்சொல்லியிருந்தனர். காவல் நிலையத்திற்கு சென்றபோது காவல் நிலையத்தில் சித்ராவின் கணவரும் , ஆஜர் எதிரியும் இருந்தனர். என்னிடம் போலிசார் இவர்கள் யார் என தெரிகிறதா என கேட்டார்கள். அப்போது நான் இவர்கள்தான் ஏற்கனவே நான் பணிபுரியும் தோட்டத்திற்கு வந்து அங்கு குடியிருந்து கொண்டு வேலை செய்து கொண்டிருந்த சித்ரா மற்றும் பாண்டியிடம் சண்டைபோட்டவர்கள் என்று சொன்னேன். ஆஜர் எதிரியும், சித்ராவின் கணவரும் தோட்டத்திற்கு வந்து சண்டைபோட்டு சென்ற 20 நாட்களுக்கு பின்புதான் போலிசார் காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். நான் காவல்

நிலையம் சென்றபோது நேரம் மாலை 04.00 – 04.30 இருக்கும். எதற்காக எங்களை கூப்பிட்டு விசாரிக்கிறீர்கள் என்று கேட்டபோது பாண்டி இறந்துவிட்டதாக சொன்னார்கள். சித்ராவின் கணவரும், ஆஜர் எதிரியும் சேர்ந்து பாண்டியை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இறந்துபோன பாண்டியும், ஆஜர் எதிரியும் நான் பணிபுரிந்த தோட்டத்திற்கு வந்து சித்ராவுடன் சண்டைபோட்டவர்கள் அவர்கள்தான் என தெரியுமா என்றால் தெரியும். இரவு 11.30 மணிக்கு அங்கு நாங்கள் சென்றுபோய் பார்த்தபோது யார்யார் இருந்தார்கள் என்றால் சித்ரா, பாண்டி, சித்ராவின் கணவர் மற்றும் ஆஜர் எதிரி. சித்ரா, பாண்டி தவிர்த்து நானும், சேக் முகம்மது மட்டும்தான் தோட்டத்தில் தங்கியிருந்தோம், வேறுயாரும் தங்கியிருக்கவில்லை. போலிசார் எங்களை கூப்பிட்டு சண்டை போட்டது சம்மந்தமாகத்தான் விசாரித்தார்களா என்றால் இல்லை, பாண்டி இறந்துவிட்டதாகவும் அவர் இறந்தது சம்மந்தமாக உங்களுக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டார்கள். நாங்கள் சென்றபோது அடிதடி சண்டை இல்லை. அந்த சண்டை குறித்து ஆஜர் எதிரி மற்றும் சித்ராவின் கணவர் தெய்வேந்திரன் மீது புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் பணிபுரிந்த தோட்டத்திற்கு எதிரியும், சித்ராவின் கணவரான தெய்வேந்திரனும் வந்து சித்ராவுடன் சண்டைபோட்டதாகவும், அப்போது அவர்களை பார்த்தாகவும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)